# ஊடக வெளியீடு

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2024(2025)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) 2024(2025) பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை 2024 நொவம்பர் 05 ஆம் திகதி தொடக்கம் 2024 நொவம்பர் 30 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமையில் மட்டுமே சமர்ப்பிக்க முடியும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. அதற்கமைவாக பாடசாலை விண்ணப்பதாரிகள் பாடசாலை அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

**03. தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.** தேசிய அடையாள அட்டை இல்லாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது பாதுகாவலர் (தாய், தந்தை) அடையாள அட்டையைப் பயன்படுத்தி பதிவு செய்து க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடியும்.

04. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic என்பவற்றுக்குள் நுழைந்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய பிழையின்றி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தை தரவேற்றம் செய்த பின்னர் அதனை அச்சுப் பிரதி செய்து தேவையேற்படுமிடத்து சமர்ப்பிப்பதற்காக தம்வசம் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்த வேண்டிய பயனர் சொல் (user name), கடவுச் சொல் (password) என்பன பாடசாலை அதிபர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**2024 நொவம்பர் மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும்.**

05. இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொடர்பு இலக்கங்கள் அல்லது மின்னஞ்சல் முகவரி ஊடாக தொடர்பு கொள்ளமுடியும்.

தொடர்பு இல : 0112784208 / 0112784537/ 0112785922

மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல
2024.11. 04

tamilguru.lk